அவநிலை உள்ளது.
இந்த நிலையில் நேற்று

தருமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## வேலூரில் என்.சி.சி. மாணவர்கள்

# லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி

**வேலூர், நவ. 3-**

வேலூர் ஊரீசு கல்லூரியின் தேசிய மாணவர் படை (என்.சி.சி.) மாணவர்கள் லஞ்ச ஒழிப்பு விழிப்புணர்வு வாரத்தையொட்டி, நேற்று விழிப்புணர்வு பேரணி சென்றனர். 'நேர்மை நமது வாழ்வு' என்ற தலைப்பில் நடந்த இந்த பேரணிக்கு காலை நேர கல்லூரியின் துணை முதல்வர் ஜெ.ஆனி கமலா பிளாரன்ஸ் தலைமை தாங்கி கொடியசைத்து துவக்கி வைத்தார். காட்பாடி காந்திநகரில் உள்ள 10-வது பட்டாலியன் என்.சி.சி.யின் நாயக் சுபேதார் எம்.சசிகுமார், ஹவில்தார் ராஜன்சிங் முன்னிலை வகித்தனர்.

கல்லூரி வாசலில் தொடங்கப்பட்ட பேரணி, ஆபீசர்ஸ் லைன் சாலை, வெங்கடேஸ்வரா பள்ளி, புதிய மாநகராட்சி ஆபீஸ் வழியாக சென்று மீண்டும் ஊரீசு கல்லூரி மெயின் வாசலை அடைந்தது.

பேரணியை கல்லூரி என்.சி.சி. படை பிரிவின் அசோசியேட் ஆபீசர் பேராசிரியை சி.ஞானலின் ஷைனி வழிநடத்தி சென்றார். நிதி ஆளுனர் டாக்டர் காலேப் நோபுள் சந்தர் மற்றும் பலர் கலந்துகொண்டார்.

## திருவண்ணாமலையில்

# குடியரசு சேனா கட்சியினர் ஆர்ப்பாட்டம்